உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 07.05.2026 • மலர் 04 • இதழ்: 127 • Edition : Nagercoil • 07.05.2026 • Vol : 04 • Issue : 127 • Page : 4 • Rs. 5/-

# முதல் கையெழுத்திலேயே பெண்களுக்கு சலுகை

## தவெக தலைவர் விஜய் அறிவிப்பு



சென்னை, மே 7

தமிழக சட்டசபை தேர்தலில் த.வெ.க. 108 இடங்களிலும், தி.மு.க. கூட்டணி 73 இடங்களிலும், அ.தி.மு.க. கூட்டணி 53 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. அதாவது, எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பெரும்பான்மை என்பது எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்றால், மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் பாதியான 117 தொகுதிகளை விட ஒன்று கூடுதலாக இருக்க வேண்டும். அதாவது, 118 தொகுதிகள் வேண்டும்.

இதனிடையேத.வெ.க. தலைவர் விஜய், வெற்றி பெற்ற வேட்பாளர்களை நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து நடந்த ஆலோசனை கூட்டத்தில் சட்டமன்ற குழு தலைவராக விஜய் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்த சூழலில் ஆட்சிக் கட்டிலில் அமருவதற்கான நடவடிக்கைகளை த.வெ.க. தீவிரமாக எடுத்து வருகிறது. இப்படிப்பட்ட சூழலில், ஒரு கட்சியின் வெற்றிக்கான கதாநாயகனாக எப்போதுமே அக்கட்சி வெளியிடும் தேர்தல் அறிக்கை தான் இருக்கும். அந்த வகையில் த.வெ.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டு இருந்தது. அந்த தேர்தல் அறிக்கையும் அக்கட்சியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது.

அதன்படி, முதல்அமைச்சராக விஜய் பொறுப்பேற்றதும், அந்த தேர்தல் அறிக்கையில் எந்த அறிவிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவருடைய முதல் கையெழுத்து இருக்கும்? என்ற எதிர்பார்ப்பு இப்போதே மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அறிவிப்புகள் வருமாறு:

வங்கிக்கணக்கில் ஒவ்வொரு மாதமும் ரூ.2,500

★ ஒவ்வொரு குடும்பத் தலைவிக்கும் 60 வயது எட்டும் வரையில், அவர்களுடைய வங்கிக்கணக்கில் ஒவ்வொரு மாதமும் ரூ.2,500 வரவு வைக்கப்படும்.

★ ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆண்டுக்கு 6 கியாஸ் சிலிண்டர்கள் வாங்குவதற்கான தொகை வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

★ மாநிலம் முழுவதும் இயங்கும் நகர, மாநகர, மாவட்டங்களுக்கு இடையேயான அனைத்து அரசு பஸ்களிலும் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கும் வெற்றிப்பயணம் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ ஆண்டு வருமானம் ரூ.5 லட்சத்துக்கும் குறைவாக உள்ள குடும்பங்களில் நடைபெறும் திருமணங்களில் மணப்பெண்ணுக்கு 8 கிராம் தங்கமும், பட்டுச் சேலையும் வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டில் அரசு ஆஸ்பத்திரிகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தங்க மோதிரம்மற்றும்மென்மையான துணி, டயப்பர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள்அடங்கிய தாய்மாமன் சீர் பெட்டகம் வழங்கப்படும்.

★ அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் பிளஸ்2 வரை படிக்கும் மாணவ மாணவிகளின் தாயார், காப்பாளர் வங்கிக் கணக்கில் ஆண்டுக்கு ரூ.15 ஆயிரம் 2 தவணைகளில் வரவு வைக்கப்படும்.

5 லட்சம் புதிய வீடுகள்

★ தகுதியுள்ள வீடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 சதவீதம் சுத்தமான குடிநீர் வினியோகம் உறுதி செய்யப்படும்.

★ கிராமப்புறங்களில் உள்ள ஏழைஎளிய மக்கள் சொந்தவீடு பெறும் வகையில் 5 லட்சம் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

★ ரேஷன் பொருட்களில் எடைக்குறைவு. தரக்குறைவு, கலப்படம், கடத் தல் ஆகியவற்றை தடுத்து நியாயமான எடையில், தரமான பொருட்கள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் அரிசி தவிர்த்த மற்ற அனைத்து ரேஷன் பொருட்களும் பாக்கெட்டுகளாக வினியோகம் செய்யப்படும். 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு ரேஷன்கடை அமைக்கப்படும்.

★ மத்திய அரசின் பொதுப்பட்டியலில் இருக்கும் கல்வியை (மருத்துவக்கல்வி உள்பட) மாநில பட்டியலுக்கு மாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எதற்கு முன்னுரிமை..?

★ முதல்அமைச்சரின் நேரடி கண்காணிப்பில் போதைப்பொருள் தடுப்பு படை உருவாக்கப்படும். இதன் மூலம் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு போதைப்பொருள் பயன்பாடு அறவே நீக்கப்படும்.

★ நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.3,500, கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,500 குறைந்தபட்ச ஆதார விலையாக வழங்கப்படும்.

★ 2 ஏக்கருக்கும் குறைவாக விவசாய நிலம் வைத்துள்ள விவசாயிகளின் குழந்தைகளுக்கு கட்டணமில்லா உயர்கல்வி வழங்கப்படும்.

★ 2 லட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அவர்களுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் கட்டணமில்லாமல் வழங்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் உள்ளன.

பெரும்பாலும் மகளிர் எதிர்பார்க்கும் அறிவிப்புகளுக்கே விஜய் முன்னுரிமை அளிப்பார் என்று கட்சி வட்டாரத்தில் பேசப்படுகிறது. அது ஒவ்வொரு குடும்பத்தலைவிக்கும் ஒவ்வொரு மாதமும் ரூ.2,500 கொடுக்கப்படும் என்ற அறிவிப்பாகவோ, போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பாகவோ இருக்கலாம் எனவும், ஏன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத பெண்களுக்கான அதிரடி அறிவிப்பாகவோ கூட இருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் நடிகர் ரஜினிகாந்த் சந்திப்பு



சென்னை, மே. 7

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. திமுக கூட்டணி 73 இடங்களிலும், அதிமுக கூட்டணி 53 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

இதில் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், தவெக வேட்பாளர் வி.எஸ். பாபுவிடம் 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தார். இருப்பினும், கொளத்தூரில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நேற்று மாலை நேரில் சென்று மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்தார். இதனிடையே திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறியுள்ளது. மேலும் தமிழகத்தில் தவெக ஆட்சி அமைப்பதற்கு நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பதாக தெரிவித்துள்ளது. இந்த நிலையில் நடிகர் ரஜினிகாந்த் திமுக தலைவர் மு.க. ஸ்டாலினை நேரில் சந்தித்துள்ளார். சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள ஸ்டாலின் இல்லத்துக்கு நேரில் சென்று ரஜினிகாந்த் அவரை சந்தித்துள்ளார். 'இக்கட்டான நேரத்திலும் உங்களுடன் இருப்பேன்' என்று ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். பரபரப்பான அரசியல் சூழலில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலினை, நடிகர் ரஜினிகாந்த் சந்தித்துள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## மேற்கு வங்காளத்தில் ஆட்சியை பிடித்த பா.ஜ.க.; பிரதமர் மோடிக்கு டிரம்ப் வாழ்த்து



கொல்கத்தா, மே. 7

மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பதவிக்காலம் மே 7ந்தேதியுடன் முடிவடைய உள்ள சூழலில், மொத்தமுள்ள 294 தொகுதிகளுக்கான சட்டசபை தேர்தல், மாநிலத்தில் 2 கட்டங்களாக நடைபெற்றது.

இதன்படி, ஏப்ரல் 23 ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29ந்தேதி 2ம் கட்ட தேர்தலும் நடத்தப்பட்டது. வரலாறு காணாத வகையில் 2 கட்ட தேர்தலிலும் 90 சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பதிவாகின.

மேற்கு வங்காளத்தில் 3 முறை முதல்மந்திரியாக பதவி வகித்த மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி 4வது முறையாக ஆட்சியை பிடிக்கும் முனைப்பில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டது. எனினும், தேர்தல் முடிவில் அக்கட்சி தோல்வியை தழுவியது.

மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க. கடந்த தேர்தலில் 77 தொகுதிகளையே பெற்றிருந்தது. தற்போது, 207 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இது பெரும்பான்மை பெற வேண்டிய 148 என்ற எண்ணிக்கையை காட்டிலும் மிக அதிகம் ஆகும். மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க. ஆட்சியை பிடித்த நிலையில், பிரதமர் மோடிக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அமெரிக்க வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் குஷ் தேசாய் கூறும்போது,

பிரதமர் மோடியின் சமீபத்திய, வரலாற்று சிறப்புமிக்க மற்றும் உறுதியான தேர்தல் வெற்றியை பெற்றதற்காக ஜனாதிபதி டிரம்ப் வாழ்த்து தெரிவித்து உள்ளார் என்றார்.

## போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்த மு.க.ஸ்டாலினுக்கு நன்றி ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, மே. 7

தமிழகத்தில் நடந்து முடிந்த 17வது சட்டசபை தேர்தலில், கருத்து கணிப்புகளை தவிடுபொடியாக்கி, விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அதிக இடங்களில் வெற்றி பெற்று இருக்கிறது.

ஆட்சி அமைக்கும் வகையில் பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்களில், த.வெ.க.வுக்கு 108 இடங்கள் கிடைத்துள்ளன.

அதேபோல், தி.மு.க. கூட்டணிக்கு 73 இடங்களும், அ.தி.மு.க. கூட்டணிக்கு 53 இடங்களும் கிடைத்துள்ளன.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெற்றி பெற்றுள்ளார். இந்த நிலையில் போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பளித்து, எனது வெற்றிக்காக தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலினுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, எனது வெற்றிக்காக தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணித் தலைவரும், தமிழ்நாடு துணை முதல் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலினுக்கும்; தேர்தல் பணியாற்றிய தேனி மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான தங்கத் தமிழ்ச்செல்வனுக்கும்; மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும்; நகரக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும்; பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும்; ஊராட்சிக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும்; கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும்; சார்பு அணி நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல், 'கருமமே கண்ணாயினார்' என்பதற்கேற்ப, ஓயாமல் அல்லும் பகலும் அயராது உழைத்த திராவிட முன்னேற்றக்கழக உடன்பிறப்புகளுக்கும்;

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி தலைவர்களுக்கும்; நிர்வாகிகளுக்கும்; தொண்டர்களுக்கும்; என்னை வெற்றி பெறச் செய்த போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## சென்னை

# வேன் பழுதுபார்க்கும் கடையில் தீ விபத்து

சென்னை, மே. 7

சென்னை கொரட்டூர், வாட்டர் கேனல் சாலையில் வேன் பழுதுபார்க்கும் கடை உள்ளது. அங்கே நேற்று இரவு ஒரு வேனில் திடீரென தீப் பற்றி எரிந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த வில்லிவாக்கம், அம்பத்தூர் தீயணைப்பு துறை வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்றனர். அதற்குள் 3க்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிந்து தீயில் கருகி நாசமாயின.

இதுகுறித்து கொரட்டூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## திருவள்ளூர்

# போலீஸ் விசாரணைக்கு சென்ற வாலிபர் தீக்குளிப்பு

திருவள்ளூர், மே 7

சென்னை அடுத்த திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த தாணிப்பூண்டி கிராமத்தைசேர்ந்தவர்விஷ்வா (வயது 21). இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த காவியா(20) என்பவருக்கும் இடையே கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு காதல் திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

காவியாவின் தந்தை சுமன்(48), தனது மகள் மற்றும் மருமகன்விஷ்வா இருவரையும் தனது வீட்டுக்கு அழைத்து சென்றதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு குறித்து காவியா பாதிரிவேடு காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதைத் தொடர்ந்து போலீசார் விசாரணைக்கு அழைத்ததாக கூறப்படுகிறது.

காவல் நிலையத்துக்கு நேற்று விசாரணைக்கு சென்ற விஷ்வா, திடீரென தனது கையில் பிளாஸ்டிக் பாட்டிலில் மறைத்து வைத்திருந்த பெட்ரோலை தனது உடலில் ஊற்றி தீக்குளித்து தற்கொலைக்கு முயன்றார்.

இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. பலத்த தீக்காயம் அடைந்த விஷ்வாவை உறவினர்கள் முதலுதவி சிகிச்சைக்காக கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

## வண்டலூர்

# உயிரியல் பூங்காவில் இருந்து தப்பிய சிறுத்தைப்பூனை: தேடும் பணி தீவிரம்



சென்னை, மே. 7

சென்னை அடுத்த வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 1700க்கும் மேற்பட்ட விலங்குகள், பறவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனை தினந்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் பார்த்து செல்கின்றனர்.

இந்த நிலையில் விலங்குகள் பரிமாற்ற திட்டத்தின்கீழ் ஜம்பு உயிரியல் பூங்காவில் இருந்து கடந்த மார்ச் மாதம் ஒரு ஜோடி சிறுத்தைப்பூனை வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு கொண்டுவரப்பட்டது.

அதனை தனியாக ஒரு கூண்டில் வைத்து பல்வேறு மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு பூங்கா நிர்வாகம் பராமரித்து வந்தது.

இந்த நிலையில் தனியாக கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறுத்தைப்பூனை நேற்று முன்தினம் திடீரென கூண்டில் இருந்து தப்பி பூங்கா வளாகத்தில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இதை தொடர்ந்து கூண்டில் இருந்து தப்பிய சிறுத்தைப்பூனையை தேடும் பணியில் பூங்கா ஊழியர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். சுமார் 21 ஆண்டுகளுக்கு பிறகு வண்டலூர் பூங்காவுக்கு ஒரு ஜோடி சிறுத்தைப்பூனை விலங்குகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பைக் வாங்கி தராததால் மனமுடைந்த கல்லூரி மாணவர் தற்கொலை

விழுப்புரம், மே. 7

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுகா மொளசூர் அருகே உள்ள மானனையன் பேட்டை பகுதியை சேர்ந்தவர் கலைமணி மகன் தேவகுமரன் (18 வயது). இவர், புதுச்சேரி மாநிலத்தில் உள்ள தனியார் என்ஜினீயரிங் கல்லூரி ஒன்றில் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

இவர் தனது தந்தையிடம் கல்லூரிக்கு சென்று வர வசதியாக புதியதாக பைக் வாங்கித் தரும்படி கேட்டுள்ளார். அதற்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். இதனால் கடந்த சில நாட்களாக மாணவர் தேவகுமரன் மனமுடைந்து காணப்பட்டார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று இரவு மாணவர் தேவகுமரன், தனது வீட்டின் படுக்கை அறையில் உள்ள ஜன்னல் கம்பியில் கயிற்றால் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இது குறித்த தகவலின்பேரில் கோட்டக்குப்பம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மாணவர் தேவகுமரனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக புதுச்சேரி பிம்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை

# விமானத்தில் கடத்தி வந்த உயர்ரக கஞ்சா பறிமுதல்; 2 பேர் கைது

சென்னை, மே. 7

தாய்லாந்தில் இருந்து சென்னைவரும் விமானத்தில் பெருமளவு போதைப்பொருள் கடத்தப்படுவதாக சுங்க இலாகா நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து அதிகாரிகள்தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது பாங்காக்கில் இருந்து வந்த விமானத்தில், சுற்றுலா விசாவில் சென்று திரும்பிய 26 வயதுள்ள வாலிபர் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரது உடைமைகளை சோதனை செய்தபோது, அழகு சாதன பொருட்களுக்குள் காற்று புகாதவாறு மறைத்து வைக்கப்பட்டிருந்த 868 கிராம் ஹைட்ரோபோனிக்கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதேபோல் தாய்லாந்தில் இருந்து வந்த மற்றொரு விமானத்தில் வந்த 30 வயதுள்ள வாலிபரை அதிகாரிகள் சோதனையிட்டனர்.

பட்டதாரியான அவர், வேலையில்லாத காரணத்தால் கடத்தல் கும்பலுக்கு 'குருவியாக' செயல்பட்டது தெரியவந்தது. அவரது சூட்கேசில் இருந்த உணவு பொட்டலங்களுக்குஇடையேமறைத்து வைக்கப்பட்டிருந்த 900 கிராம் உயர்ரக கஞ்சாவையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட வாலிபரிடம் நடத்திய விசாரணையில், இந்த போதைப்பொருள்பொட்டலங்களை விமான நிலையத்துக்கு வெளியே காத்திருக்கும் நபர்களிடம் ஒப்படைத்தால் பணம் தருவதாக கடத்தல் கும்பல் கூறியதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, விமான நிலையத்துக்கு வெளியே கஞ்சாவை வாங்குவதற்காக காத்திருந்த 2 பேரை அதிகாரிகள் அதிரடியாக கைது செய்தனர்.

இந்த கடத்தல்களுக்கு பின்னால் மூளையாக செயல்படும் கும்பல் குறித்தும், வெளிநாடுகளில் உள்ள தொடர்புகள் குறித்தும் சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சொகுசு கப்பலில் அரிய வகை வைரஸ் பரவல்

## 3 பேர் பலி; 144 பேர் அச்சம்



நியூயார்க் மே. 7

டச்சு நாட்டு சொகுசு கப்பல் ஒன்று கேப் வெர்தே கடலோர பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. அந்த கப்பலில் 147 பயணிகள் உள்ளனர். அவர்களில் சிலருக்கு ஹண்டா எனப்படும் அரிய வகை வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது கண்டறியப்பட்டு உள்ளது.

இதன் பாதிப்புகளால், 3 பேர் பலியாகி உள்ளனர். மீதமுள்ள 144 பேர் அச்சமடைந்து உள்ளனர். இது மற்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்த கூடும் என்றும் பரவ கூடும் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரித்து உள்ளது. பரிசோதனையில், 7 பேருக்கு தொற்று ஏற்பட்டு உள்ளது என தெரிய வந்து உள்ளது.

தென் அமெரிக்காவில் கப்பல் பயணிக்கும்போது, அதில் பயணிகள் ஏறுவதற்கு முன்பு, வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்க கூடும் என நம்பப்படுகிறது. இதனை தொடர்ந்து சுகாதார அதிகாரிகள் நிலைமையை கண்காணித்து வருகின்றனர்.

## விளாத்திகுளம் அருகே

# 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த மீனவர் கைது



விளாத்திகுளம் மே 07

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அமளிநகர் பகுதியில் சேர்ந்த பேஸ்கி பர்ணாந்த் என்பவரின் மகன் திலேத்குமார் (52), இவர் விளாத்திகுளம் அருகே உள்ள வேம்பாரில் உள்ள தனது நண்பர் ஒருவருடன் தங்கியிருந்து மீன்பிடி தொழில்செய்துவந்துள்ளார். இந்தநிலையில் கடந்த 2703 2026 அன்று வீட்டில் உள்ள அனைவரும்சர்ச்சுக்குசென்ற நிலையில், திலேத்குமாரின் நண்பரின் 16 வயது சிறுமி மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.அப்போது அங்கிருந்த திலேத்குமார் 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. இதனை அடுத்து சிறுமியின் தாயார் அளித்த புகாரின் பேரில் விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் மீனவர் திலேத்குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## தேனி மாவட்டம்

# பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான கோடை காலப் பயிற்சி முகாம்

## கலெக்டர் தொடங்கி வைத்தார்




தேனி, மே. 7

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் அரசுமேல்நிலைப்பள்ளியில் (06.05.2026) சமூகநலத்துறை சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான கோடை காலப் பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், வைத்தார்.

புத்தக அறிவோடு, தனித்திறன்களை கற்றுத்தருவதன் மூலம் மாணவர்களை தன்னம்பிக்கை மிக்கவர்களாக மாற்றலாம். அதனடிப்படையில் பள்ளி மாணவர்களின் கோடை விடுமுறையினை புதிய திறன்களை கற்றுக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக மாற்றுவது மிகவும் அவசியம். மாணவர்களின் விருப்பம் மற்றும் தனித்திறமைகளை கண்டறிந்து, அவர்களுக்கு பயிற்சி வழங்கு வதற்காக இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற முகாம்களில் மாணவர்கள் கலந்து கொள்வதன் மூலம் தங்களின் திறமைகளை வெளிகாட்டவும், விடுமுறை காலத்தை பயனுள்ள முறையில் கழிக்கவும் பயனுள்ளதாக அமையும். இம்முகாமில் ஓவியப்பயிற்சி, சிலம்பம், சதுரங்கம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் நாற்றங்கால் வளர்ப்பு முறை ஆகியவைகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. இம்முகாம் இன்றுமுதல் தொடர்ச்சியாக 20 நாட்கள் நடைபெற உள்ளது. இம்முகாமினை மாணவர்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் நடைபெற்ற முகாமில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் முதன்மைக் கல்வி அலுவலர் நாகேந்திரன், மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணு பிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (மகளிர் அதிகார மையம்) சாருமதி மற்றும் முகாம் பயிற்சியாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டி நகருக்குள் புகுந்த காட்டு யானை

## எல்க்ஹில் முருகன் கோவிலுக்கு பக்தர்கள் செல்ல தடை



நீலகிரி, மே. 7

நீலகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் கரடி, புலி, காட்டுயானை, சிறுத்தை உள்பட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன. வனவிலங்குகள் வனப்பகுதியில் இருந்து வெளியேறுவதால் மனித வனவிலங்கு மோதல்கள் அதிகரித்துள்ளது. இதற்கிடையே கடந்த ஆண்டு கோடை சீசனின் போது, குன்னூரில் இருந்து காட்டு யானை முதல் முறையாக ஊட்டி அடுத்த தொட்டபெட்டா மலை சிகரத்துக்கு வந்தது.

இதேபோல் இந்த ஆண்டும் கோடை சீசன் சமயத்தில் மற்றொரு காட்டு யானை தொட்டபெட்டா மலை சிகரம் பகுதிக்கு வந்தது. பின்னர் வேறு பகுதிக்கு இடம்பெயர்ந்தது. சமீபத்தில் ஊட்டி பன்சிட்டி அருகில் உள்ள வனப்பகுதியில் காட்டு யானை சுற்றித் திரிந்தது. இதனால் யானையின் நடமாட்டத்தை வனத்துறையினர் கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை திடீரென காட்டு யானை ஊட்டி நகரின் மையப்பகுதியில் உள்ள எட்டின்ஸ் சாலையில் புகுந்து உலா வந்தது. அங்குள்ள தனியார் மருத்துவமனை வளாகத்திற்குள் நுழைந்தது. பின்னர் அங்கிருந்து சாலையில் ஒய்யாரமாக நடந்து சென்றது. நகரில் ரோஜாபூங்கா அருகே உள்ளிட்ட சில பகுதிகளில் காட்டு யானை உலா வந்தது. அங்குள்ள காய்கறி தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தியது.

தற்போது எல்க்ஹில் பகுதியில் காட்டு யானை முகாமிட்டு உள்ளது. இந்த யானையை வனச்சரகர் ராமபிரகாஷ் தலைமையிலான குழுவினர் டிரோன் மூலம் கண்காணித்து வருகின்றனர். காட்டு யானை நடமாட்டம் காரணமாக நேற்று எல்க்ஹில் முருகன் கோவிலுக்கு பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது.

இதுகுறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறும்போது, நீலகிரியில் வனவிலங்குகள் ஊருக்குள் புகும் சம்பவம் ஆங்காங்கே நடைபெற்று வருகிறது.

இருந்தாலும், ஆச்சரியம் அளிக்கக்கூடிய வகையில் காட்டுயானை ஊட்டி நகரின் மையப்பகுதிக்கு வந்துள்ளது. கடந்த பல ஆண்டுகளில் முதல் முறையாக யானை ஊட்டி நகருக்குள் புகுந்து உள்ளது.

பொதுமக்களுக்கு அசம்பாவிதம் ஏற்படுவதற்கு முன்பு, மாவட்ட நிர்வாகம், வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, பொதுமக்களின் உடைமைகளுக்கும், உயிர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றனர்.

## தூத்துக்குடி

# முன்விரோதத்தில் மீனவருக்கு கத்திக்குத்து; 3 பேர் கைது

தூத்துக்குடி, மே. 7

தூத்துக்குடி தாளமுத்து நகர்கணபதிநகரைச்சேர்ந்தவர்வினோத் (வயது 32). மீனவரான இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். நேற்று காலை கடலுக்கு சென்றுவிட்டு, மாலை 7 மணியளவில் அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். மொட்டைக்கோபுரம் அருகே அவர் வந்து கொண்டிருந்தபோது, அங்கு மறைந்திருந்த 3 பேர் கொண்ட கும்பல் அவரை வழிமறித்துள்ளது.

பின்னர் அவர்கள் வினோத்தை சரமாரியாக தாக்கி, கத்தியால் குத்தியுள்ளது. இதில் பலத்த காயமடைந்த அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த சம்பவம் குறித்த புகாரின்பேரில், தாளமுத்துநகர் இன்ஸ்பெக்டர் அருளப்பன் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை செய்தார்.

விசாரணையில், மேற்சொன்ன தாக்குதலில் ஈடுபட்டவர்கள் திரேஸ்புரத்தைச் சேர்ந்த கென்னடி மகன் பிரசாந்த்(25), சுனாமி காலனியைச் சேர்ந்த மைக்கேல் மகன் ஜேம்ஸ்(25) மற்றும் மாதவன் நாயர் காலனியைச் சேர்ந்த ஜார்ஜ் மகன் சூசைய்யா(47) என்பது தெரியவந்தது.

இவர்களுக்கும் வினோத்தின் தம்பிக்கும் இடையே ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இதன் காரணமாகவே அவர்கள் 3 பேரும் வினோத்தை தாக்கியது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே பிடிபட்ட 3 பேரையும் போலீசார் கைது செய்து தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கல்லூரி பேராசிரியரின் படத்தை ஆபாசமாக சித்தரித்து மிரட்டி பணம் பறிப்பு

நெல்லை, மே.7

நெல்லை பேட்டை பகுதியை சேர்ந்த 34 வயது வாலிபர் நெல்லையில் உள்ள தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு செல்போன் செயலி மூலம் கடன் பெற முயன்றுள்ளார். அப்போது அந்த செயலியில் கேட்ட புகைப்படம் உள்பட முக்கிய தகவல்களை கொடுத்துள்ளார். பின்னர் அந்த செயலி மூலம் சுமார் ரூ.30 ஆயிரம் வரை கடன் பெற்றதாக கூறப்படுகிறது. அந்த கடன் தொகையை சில நாட்களில் அந்த பேராசிரியர் திரும்ப செலுத்தியுள்ளார்.

இந்த நிலையில் மர்மநபர்கள் சிலர் வாட்ஸ்அப் மூலம் அந்த பேராசிரியரின் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து கூடுதல் பணத்தை செலுத்த கூறி மிரட்டியுள்ளனர். இதனால் அவர் ரூ.30 ஆயிரம் கடனுக்கு சுமார் ரூ.60 ஆயிரம் வரையிலும் பணத்தை திருப்பி செலுத்தியுள்ளார். எனினும் அந்த கும்பல் கூடுதல் பணத்தை கேட்டு ஆபாசமாக சித்தரித்த படத்தை அவரின் மனைவிக்கு அனுப்பி மிரட்டியுள்ளனர். இதனால் மனமுடைந்த பேராசிரியர் நெல்லை மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் சைபர் கிரைம் போலீசார் 2 பிரிவுகளின் கீழ்வழக்குப்பதிவுசெய்து மர்மகும்பல் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை: தண்டவாளத்தை கடக்க முயன்ற முதியவர் ரெயில் மோதி பலி

சென்னை, மே. 7

சென்னைவியாசர்பாடி சஞ்சய்நகரை சேர்ந்தவர் ரங்கநாதன் (வயது 69). இவர் மூலிகை பொருட்களை வைத்து மருத்துவம் பார்த்து வந்ததாக கூறப்படுகிறது. இவர் நேற்று காலை சென்னையிலிருந்து ஆவடிக்கு மூலிகை பொருட்கள் வாங்க ரெயிலில் பயணம் செய்தார். அண்ணனூர்ரெயில்நிலையத்தில் இறங்கிய அவர், அங்கு அருகிலுள்ள ரெயில் தண்டவாளத்தை கடக்க முயன்றபோது, சென்னை நோக்கி வந்த எக்ஸ்பிரஸ் ரெயில் மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் ஆவடி ரெயில்வே போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று, முதியவரின் உடலை பிரேத பரிசோதனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கேரளாவின் அடுத்த முதல்மந்திரி யார்?

# 3 பேர் இடையே கடும் போட்டி



திருவனந்தபுரம், மே. 7

கேரளத்தில் நடந்து முடிந்த 140 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி 102 இடங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கூட்டணி 35 இடங்களையும் பா.ஜனதா கூட்டணி 3 இடங்களையும் கைப்பற்றியது. இதனால் கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான அரசு ஆட்சி அமைக்கிறது.

இந்த தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றால் முதல்மந்திரி பதவிக்கு கடும் போட்டி இருக்கும் என்று தேர்தலுக்கு முன்பே எதிர்பார்க்கப்பட் டது. மூத்த தலைவரான ரமேஷ் சென்னிதலா, எதிர்க்கட்சி தலைவர் வி.டி.சதீசன், கே.சி. வேணுகோபால் எம்.பி. ஆகியோர் முதல் மந்திரி பதவி மீது குறி வைத்து காத்து இருக்கின்றனர்.

வி.டி.சதீசன்:

கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி மீண்டும் தோல்வியடைந்த நிலையில் எதிர்க்கட்சி தலைவராக வி.டி.சதீ சன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் எதிர்க்கட்சி தலைவர் ஆனபிறகு நடந்த 5 இடைத்தேர்தல்களில் 4 தொகுதிகளில் காங் கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. நாடாளுமன்ற தேர்தலில் மொத்தமுள்ள 20 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பின்னர் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலிலும் காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. இவை அனைத்தும் வி.டி.சதீசனுக்கு பலமாக உள்ள போதிலும் சமுதாய தலைவர்களுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வருவது அவருக்கு பலவீனமாக உள்ளது.

ரமேஷ் சென்னிதலா:

கேரளத்தில் ரமேஷ் சென்னிதலா 26 வயதில் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டு 30 வயதில் மந்திரி ஆனவர். உள்துறை மந்திரியாக இருந்த இவர், 4 முறை எம்.பி.யாகவும் இருந்துள்ளார். காங்கிரஸ் கட்சியை உடைத்து கருணாகரன் புதிய கட்சியை தொடங்கியபோது மாநில தலைவராக பொறுப்பேற்று கட்சியை திறம்பட நடத்தியவர் என்ற பெயர் ரமேஷ் சென்னிதலாவுக்கு உண்டு. ஆனால் இவர்எதிர்க்கட்சிதலைவராக இருந்த காலகட்டத்தில் தான் கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி படுதோல்வி அடைந்தது. இது இவருக்கு ஒரு பலவீனமாக உள்ளது.

கே.சி.வேணுகோபால்:

முதல்மந்திரி ரேசில் அடுத்த இடத்தில் உள்ள கே.சி.வேணுகோபால், சோனியாகாந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மல்லிகார்ஜூன கார்கே உள்பட காங்கிரஸ் தலைவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்.

இது இவருக்கு ஒரு பலமாக உள்ள போதிலும் தற்போது எம்.பி.யாக உள்ள யாருக்கும் தேர்தலில் சீட் கொடுக்காத நிலையில் முதல்மந்திரி பதவிக்கு தேர்ந்தெடுத்தால் காங்கிரஸ் கட்சியில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. இந்த நிலையில் கேரளத்தில் புதிய முதல் மந்திரி வி.டி.சதீசனா? ரமேஷ் சென்னிதலாவா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# கடன் தள்ளுபடி வாக்குறுதிகளை நம்ப வேண்டாம்: ரிசர்வ் வங்கி எச்சரிக்கை

டெல்லி, மே. 7

கடன் தள்ளுபடி செய்வதாக கூறி பொதுமக்களை ஏமாற்றும் தவறான பிரசாரங்கள் குறித்து இந்திய ரிசர்வ் வங்கி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. வங்கிகள் அல்லது வங்கி சாரா நிதி நிறுவனங்களில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை என்று கூறி மோசடி அமைப்புகள் மக்களை நம்ப வைக்கின்றன.

கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகக் கூறி, அங்கீகாரம் இல்லாத கடன் தள்ளுபடி சான்றிதழ்களை வழங்கி கட்டணம் வசூலிக்கின்றனர். சேவை கட்டணம் அல்லது சட்டக் கட்டணம் என்ற பெயரில் கடன் வாங்கியவர்களிடமிருந்து பணத்தைப் பறிக்கின்றனர்.

கடன் தள்ளுபடி பெற்றுத் தருவதாகக் கூறும் நபர்களையோ அல்லது அங்கீகரிக்கப்படாத அமைப்புகளையோ தொடர்புகொள்ளவேண்டாம் என ரிசர்வ் வங்கி எச்சரித்துள்ளது.

## பஞ்சாப்

# எறிகுண்டு தாக்குதலில் வெடித்த ஸ்கூட்டர் பாகிஸ்தான் பின்னணியா? என விசாரணை



ஜலந்தர், மே. 7

பஞ்சாப்பின் ஜலந்தர் நகரில் எல்லை பாதுகாப்பு படையின் சதுக்கம் பகுதி அருகே ஸ்கூட்டர் ஒன்று திடீரென வெடித்து தீப்பற்றி எரிந்தது. தகவல் அறிந்து போலீசார் மற்றும் தீயணைப்பு அதிகாரிகள் உடனடியாக சென்று தீயை அணைத்தனர்.

பரபரப்பாக இயங்க கூடிய அந்த பகுதியில் ஏற்பட்ட இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை செய்தனர். இதில், எறிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது என தெரிய வந்துள்ளது.

இதில், பாகிஸ்தானை சேர்ந்த பாபர் கல்சா அமைப்பு உள்ளிட்ட குழுவினர் பின்னணியில் உள்ளனரா? என விசாரணை நடந்து வருகிறது. தவிர, தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கு

இதனுடன் ஏதேனும் தொடர்பு உண்டா? என்ற கோணத்திலும் விசாரிக்கப்பட்டு வருகிறது. பஞ்சாப்பில் ஜலந்தர் உள்ளிட்ட பெரிய நகரங்கள், எல்லைப்புற மாவட்டங்களில் 2024ம் ஆண்டு முதல் 20க்கும் மேற்பட்ட எறிகுண்டு தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இதில், போலீஸ் அமைப்புகள் அரசியல் அலுவலகங்கள் மற்றும் சில பாதுகாப்பு அமைப்புகளை இலக்காக கொண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன.

இதில் சில கைது நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளன. என்.ஐ.ஏ. உள்ளிட்ட மத்திய அமைப்புகள் மற்றும் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதில், பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பியாவின் சில பகுதிகளில் உள்ள நபர்களுக்கு உள்ள தொடர்பு தெரிய வந்துள்ளது.



வால்பாறை சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் முன்னாள் முதல்வரிடம்வாழ்த்துகோவைமாவட்டம்வால்பாறைசட்டமன்றத்தேர்தலில்வால்பாறை தொகுதியில் வெற்றி பெற்ற வால்பாறை நகர கழக செயலாளர் குட்டி என்ற ஆ.சுதாகர் தமிழக முன்னாள் முதல்வரும் கழக தலைவருமான மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்ச்சியில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி உடனிருந்தார்

## கோவையில்

# தமிழக வியாபாரிகள் சம்மேளனம் சார்பில் வியாபாரிகள் தின மாநாடு



கோவை மே:07

கோவை வடவள்ளி பகுதியில் தமிழக வியாபாரிகள்சம்மேளனம் மே 43 வது வியாபாரிகள் தின மாநாடு தலைவர் எஸ் எம் பி முருகன், பொதுச் செயலாளர் உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் சங்க வளர்ச்சிகள் குறித்தும், பொது சேவைகள் குறித்தும் கலந்துரையாடினர். மேலும் மூத்த பத்திரிகையாளர் கருணாகரன் சங்க கொடி ஏற்றி துவக்கி வைத்தார். பொதுச் செயலாளர் உதயகுமார் காந்தி படத்தை திறந்து வைத்தார். பொருளாளர்சிலுவை முத்துக்குமார் எம் ஆர் முருகன் படத்தை திறந்து வைத்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கோவை நாடார் சங்கத் தலைவர் பாஸ்கரன் அண்ணாச்சி, நிறுவனர் முத்தூஸ் மருத்துவமனை முத்து சரவண குமார், குஜன் பிராப்பர்ட்டீஸ் உரிமையாளர் குமார், கடைவீதி கிளை தலைவர் மணி ஆர்த்தி

அசோசியேட்ஸ் முருகானந்தம் கிருபா மருத்துவமனை டென்னிஸ் கோவில்பிள்ளை ஆர் எஸ் ஏ மெட்டல் நிறுவனர் ராஜ்குமார் செந்தில்குமார், தீன தயாளன், மருதாச்சலம்.

மேலும் வருகை புரிந்த கிளை நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்தும் கேடயம் வழங்கி சிறப்பித்தனர்.

## நாகர்கோவில் அருகே

# கள்ள தொடர்பில் பெற்ற குழந்தையை கொலை செய்த நர்ஸ் கைது

நாகர்கோவில், மே. 7

நாகர்கோவில் தேரேகால் புதூர் பகுதியை சேர்ந்த பகுதியில் பி எஸ் பி காலனி பகுதியில் உள்ள ஒரு வீட்டு முன்பு பச்சிளம்குழந்தைபிணம் கிடப்பதாக போலீசருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக சுசீந்திரம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று குழந்தையின் உடலை மீட்டு கைப்பற்றி விசாரணை நடத்தினர். விசாரணையில் அந்த வீட்டில் வசிக்கும் சுமார் 23 வயது உடைய இளம் பெண்ணிடம் விசாரணை நடந்தது.

அந்தப் பெண் தனியார் மருத்துவமனை ஒன்றில் நர்சாகவும் பணிபுரிந்து வருகிறார். போலீஸ் விசாரணையில் அவர் முன்னுக்கு பின் முரணாக பேசினார். மேலும் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார். அவரிடம் போலீஸ் நிலையத்தில் நடத்திய விசாரணையில் குழந்தை தனக்கு பிறந்தது தான் என்றும், தனது அக்கா கணவர் மதன்குமார் (43) என்பவருடன் ஏற்பட்ட கள்ளக்காதலில் தான் கர்ப்பம் தரித்ததாக கூறினார்.

மேலும் குழந்தை பிறந்தது வெளியே தெரிந்தால் அசிங்கமாகிவிடும் என்று நினைத்து, குழந்தை பிறந்ததும் வெளியே முற்றத்தில் வீசியதாக கூறினார். இதைக் கேட்டதும் போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து குழந்தையை கொலை செய்த இளம் பெண் மீதும் அதற்கு காரணமாக இருந்து அவரது காதலன் மதன்குமார் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

குழந்தையின் உடல் பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது அந்த இளம் பெண் பிரசவத்தினால் ஏற்பட்ட உடல் நல குறைபாடு காரணமாக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். கள்ளக்காதலன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## புறா பந்தயம்

# 2 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் பறந்து வந்து முதலிடம் பிடித்த யூசுப்

கோவில்பட்டி, மே. 7

நெல்லை மாவட்டம் திசையன்விளை ராயல் ரேசிங் பீஜியன் கிளப் சார்பில் லக்னோவில் இருந்து தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வரை சுமார் 2 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் புறா பந்தயம் நடந்தது.



இந்த பந்தயத்தில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர், மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 17 புறாக்கள் பங்கேற்றன.

கடந்த மாதம் 2ம் தேதி லக்னோவில் இருந்து பந்தயம் தொடங்கியது. இதில் சுமார் 31 நாட்கள் பறந்து கோவில்பட்டிக்கு வந்தடைந்த சையது அகமது இப்ராகிம் என்பவரின் புறாவான யூசுப் முதலிடத்தை பிடித்து அசத்தியது.

## விளாத்திகுளம் அருகே

# 10 ஆம் வகுப்பு மாணவியிடம் கத்தியைக்காட்டி மிரட்டி பாலியல் தொல்லை

## இளைஞர் கைது



விளாத்திகுளம் மே 07

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள ஆற்றங்கரை கிராமத்தைச்சேர்ந்த முத்துமாரியப்பன் என்பவரின் மகன் கார்த்திக்குமார் (23), இவர் புதூர் கம்பத்துப்பட்டி கிராமத்தில் 10ம் வகுப்பு பள்ளி படித்து விட்டு விடுமுறையில் வீட்டில் தனியாக இருந்த மாணவியிடம் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றதாகவும், இதனை அடுத்து அந்த சிறுமி பயத்தில் சத்தம் போட்டதாகவும், இதனால் கார்த்திக்குமார் அங்கிருந்து தப்பி ஓடி விட்டதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து அந்த சிறுமியின் தாயார் விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் கார்த்திக் குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## குமரியில்

# கும்பலாக தொடர் பைக் திருட்டு; வாலிபர் கைது

## அதிரடிப்படை போலீசார் விசாரணை

நாகர்கோவில், மே. 7

நாகர்கோவில், பெரியவிளை பீச் ரோடு பகுதியை சேர்ந்தவர் மாணிக்கம் (57). கொத்தனார். சம்பவத்தன்று இவர் தனது பைக்கை நாகர்கோவில் பழைய நகராட்சி அலுவலகம் முன்பு நிறுத்தி இருந்தார். சிறுது நேரம் கழித்துசென்றுபார்த்தபோதுஅந்தபைக்கைகாணவில்லை. இது குறித்து மாணிக்கம் வடசேரி காவல் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுபோன்று நாகர்கோவில் ஈஸ்டாப் தெருவை சேர்ந்தவர் ஜெபர்சன் (31). எலக்ட்ரீசியன். சம்பவதினம் இவரது பைக்கை வீட்டு முன் நிறுத்தி இருந்தார். சிறிது நேரம்கழித்துவந்தபார்த்தபோதுபைக்கைகாணவில்லை. இது குறித்து வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுபோன்றுஆரல்வாய்மொழி, கிறிஸ்துநகர்பகுதியில் வசித்துவருபவர்சித்திரைபாண்டி (24) காய்கறி வியாபாரி. சம்பவத்தினம் இவரது வீட்டு அருகில் நிறுத்தி இருந்த பைக்கை மர்ம நபர்கள் திருடி சென்றதாக அளித்த புகாரின் பேரில் ஆரல்வாய்மொழி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தொடர்ச்சியாகநடந்தஇந்தபைக்திருட்டுசம்பவங்களை தொடர்ந்து ஏஎஸ்பி லலித்குமார் மேற்பார்வையில் தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படை போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தினர். இந்த நிலையில் சம்பவ பகுதிகள் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். இதில் சந்தேகப்படும்படியான நபர்களை கண்டறிந்து அவர்கள் தொடர்பாக விசாரித்தனர்.

தற்போது இதில் தொடர்புடைய வாலிபர் ஒருவரை தனிப்படை போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகிறார்கள். கும்பலாக சேர்ந்து பைக் திருட்டு சம்பவங்களில் ஈடுபடுவதாக தெரிய வந்துள்ளது. இது குறித்து தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## நாகர்கோவில் அருகே

# மனைவி பிரிந்து சென்றதால் பெயிண்டரை கத்தியால் குத்திய ரவுடி கைது

நாகர்கோவில், மே. 7

நாகர்கோவில் ராமன்புதூர் பகுதியை சேர்ந்தவர் அகஸ்திலிங்கம் பிள்ளை (33). பெயிண்டிங் தொழிலாளி. இவரது மனைவி அலெக்ஸ் மேரியின் உறவினர் மகளை பீச்ரோடுபகுதியைசேர்ந்தபசுபதி (32) என்பவர்காதலித்து திருமணம் செய்துள்ளார். அடிக்கடி இவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதை அகஸ்திலிங்க பிள்ளை கண்டித்து சமாதானம் செய்து வந்தார். ஆனாலும் தகராறு நீடித்தது. இதனால் பசுபதியும் மனைவியும் பிரிந்தனர். தனது மனைவி பிரிந்து சென்றதற்கு அகஸ்திலிங்க பிள்ளை தான் காரணம் என பசுபதி நினைத்தார். இதனால் அவர் மீது ஆத்திரத்தில் இருந்தார்.

சம்பவ தினம் அகஸ்தலிங்கம் பிள்ளை பீச் ரோடு பகுதியில் செல்லும் போது, பசுபதி அங்கு வந்து அவரை தடுத்து நிறுத்தி தகராறு செய்து கத்தியால் குத்தினார். தொடர்ந்து அவர் கொலை செய்வதாக மிரட்டி விட்டு பசுபதி தப்பினார். படுகாயம் அடைந்த அகஸ்திலிங்க பிள்ளை அந்த பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்த புகாரின் பேரில் கோட்டார் போலீசார் பசுபதி மீது வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். பசுபதி மீது ஏற்கனவே பல வழக்குகள் உள்ளது. அவர் போலீஸ் நிலைய குற்ற சரித்திர பதிவேடு பட்டியலிலும் உள்ளார்.

## குளச்சல் அருகே

# திருமணமாகாத ஏக்கத்தில் தொழிலாளி தற்கொலை

குளச்சல், மே. 7

குளச்சல் அருகே பூலவிளை என்ற பகுதியை சேர்ந்தவர் பங்கிராஜு மகன்கள் மணிகண்டன் (39), விஜயகுமார் (38). இதில் விஜயகுமார் கொத்தனார் வேலை பார்த்து வருகிறார். அவர்திருமணமாகிமனைவிகுழந்தைகளுடன் வசித்து வருகிறார். மணிகண்டனுக்கு திருமணமாகவில்லை. கட்டிட வேலைக்கு சென்று வந்தார். தாயார் ராஜாத்துடன் வசித்து வந்தார். மணிகண்டனுக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாக கூறப்படுகிறது. கடந்த சில நாட்களாக மணிகண்டன் திருமணமாகாத கவலையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை வீட்டுக்கு வந்த மணிகண்டன் சிறிது நேரம்கழித்துவெளியேசென்றார். பின்னர்இரவுவீட்டிற்கு வரவில்லை. இதற்கு இடையே நேற்று காலை தாயார் ராஜம் வீட்டுக்கு பின்பக்கம் சென்று பார்க்கும் போது மணிகண்டன்மரத்தில்சேலையால்தூக்கிட்டுதற்கொலை செய்து இறந்த நிலையில் காணப்பட்டார். இது குறித்து உடனடியாக குளச்சல் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, போலீசார் சம்பவ இடம் சென்று உடலைமீட்டுகுமரிஅரசுமருத்துவகல்லூரிமருத்துவமனை அனுப்பி வைத்தனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

போச்சம்பள்ளி அருகே

# திமுக கம்பத்தில் தாவெக கொடியேற்றியதால் பரபரப்பு

## திமுகவினர் திரண்டதால் போலீசார் குவிப்பு



கிருஷ்ணகிரி, மே. 7

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திமுக கட்சியை சேர்ந்த வெண்ணிலா முருகேசன் என்பவர் அவரது சொந்த விவசாய நிலத்தின் ஓரத்தில் திமுகவின் கொடி கம்பம் நடப்பட்டு இருந்தது. 2026 சட்டமன்ற தேர்தல் காரணமாக கம்பத்திலிருந்து திமுக கொடி அகற்றப்பட்டு இருந்தது. சட்டமன்ற தேர்தலில் திமுக மற்றும் அதிமுக தோல்வியை சந்தித்த நிலையில் தவெக கட்சியினர் வெற்றியை கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் தனி நபரின் பட்டா நிலத்தில் அமைந்துள்ள திமுக கொடி கம்பத்தில் நேற்று இரவு அடையாளம் தெரியாத நபர் திமுககொடிக்கம்பத்தில்தாவேககொடியைஏற்றியுள்ளார். இன்று காலை வந்து பார்த்தபோது கொடிக்கம்பத்தில் தாவெக கொடி இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து அங்கு திமுகவினர் 100க்கும் மேற்பட்டோர் குவியத் தொடங்கினர். விவரம் அறிந்து விரைந்து வந்த பாரூர் போலீசார் திமுக கட்சியினரிடையே பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இரவோடு இரவாக கொடியை ஏற்றிய மர்ம நபரை கைது செய்யும் வரை கொடியை அகற்றக் கூடாது என திமுகவினர் கோரிக்கை வைத்துள்ளனர். சம்பவ இடத்தில் பதட்டமான சூழல் நிலவுவதால் 20க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

6 வயது சிறுவன் மர்மச்சாவில் திடீர் திருப்பம்

# தாயே கழுத்தை நெரித்து கொன்றது விசாரணையில் அம்பலம்

சென்னை, மே. 7


சென்னை வியாசர்பாடியை சேர்ந்தவர் வீர செல்வம். டாஸ்மாக் பார் ஊழியரான இவருக்கு சிவரஞ்சனி என்ற மனைவியும், கிருஷ்ணன் (6 வயது), மித்திரன் என இரண்டு மகன்களும் இருந்தனர். எல்.கே.ஜி. படித்து வந்த கிருஷ்ணன், கடந்த 3ந்தேதி காலை நீண்ட நேரமாகியும் தூக்கத்தில் இருந்து எழவில்லை.

உடனடியாக வீர செல்வம் தனது மகனை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள், சிறுவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து போலீசார் மர்மச் சாவு என வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதற்கிடையே, சிறுவனின் பிரேத பரிசோதனை அறிக்கையில், 'கழுத்து நெரிக்கப்பட்டதால் மூச்சுத் திணறி உயிரிழந்தார்' என தெரிய வந்தது. இதையடுத்து, வியாசர்பாடி போலீசார் கொலை வழக்காக மாற்றி, தாய் சிவரஞ்சனியிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். அவர் அளித்த வாக்குமூலத்தில் திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தது. அவை வருமாறு:

கடந்த 2ந்தேதி இரவு கிருஷ்ணன் தனது தம்பி மித்திரனின் கழுத்தில் இருந்த சாமி கயிற்றை பிடித்து இறுக்கி விளையாடி உள்ளார். அதை பார்த்து அதிர்ச்சியடைந்த தாய் சிவரஞ்சனி, தம்பிக்கு எவ்வளவு வலிக்கும் என்பதை உணர்த்துவதற்காக தனது மூத்த மகனான கிருஷ்ணனின் கழுத்தில் துப்பட்டாவை போட்டு விளையாட்டுத் தனமாக இறுக்கியுள்ளார்.

கிருஷ்ணன் லேசான மயக்க நிலையில் இருந்ததை பார்த்ததும் அப்படியே கட்டிலில் படுக்க வைத்துள்ளார். மறுநாள் காலையில் மகன் இறந்ததை அறிந்ததும் அதை மறைத்து நாடகம் ஆடி உள்ளார். இந்த நிலையில் மகனை கொன்ற சிவரஞ்சனியை வியாசர்பாடி போலீசார் கைது செய்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிபட்டிணம் அடுத்த ஜெகதாப் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வேடியப்பன் அருள்மிகு முத்து வேடியம்மாள் திருக்கோவிலில் வருடாந்திர நிறைவு கும்பாபிஷேக பூஜையை முன்னிட்டு மிட்டஅள்ளி ஊராட்சி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான எல் சுப்பிரமணியன் 5000 நபர்களுக்கு அன்னதானமும் சுவாமிக்கு அபிஷேக பூஜையும் கொடுத்து சிறப்பித்தார் இந்த நிகழ்வில் ஊர் கவுண்டர்கள் பொதுமக்கள் பக்தர்கள் இணைந்து அவருக்கு மரியாதை செய்தனர்



திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கூட்டணி வெளியேறிய நிலையில் கோவை மாவட்டம் காங்கிரஸ் கட்சி சார்பில் கோவை கோபாலபுரத்தில் உள்ள காமராஜர் பவன் காங்கிரஸ் அலுவலகம் முன்பு உற்சாகமாக பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினார்கள். மேலும் தமிழகம் வெற்றிக் கழகத்துடன் இணைந்ததற்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் காமராஜர் ஆட்சி மீண்டும் தமிழகத்தில் அமையப் போவதாகவும் தெரிவித்தனர். கோவை மாவட்ட காங்கிரஸ் தலைவர் விஜயகுமார்,பாசமலர் சண்முகம்,கனி லோகேஷ்,ராஜமாணிக்கம் கே.என்.ஆர் ஆறுமுகம்,நாராயணன்,ஆபீஸ் ரமேஷ் ஹர்ஷா,பிபி சிவா மற்றும் காங்கிரஸ் கட்சியினர் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

முசிறியில்

# சாலை விபத்து 2 இளைஞர்கள் பலி

திருச்சி, மே. 7

முசிறி புதுத்தெருவைச் சேர்ந்த மகேஸ்வர தயால் (19) மற்றும் சிந்தாமணி தெருவைச் சேர்ந்த அருள் முத்துக்குமரன் (20) ஆகிய இருவரும் இன்று அதிகாலை சுமார் 2 மணியளவில் இருசக்கர வாகனத்தில் முசிறி SB மெட்ரிகுலேஷன் பள்ளி அருகே சென்று கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக பைக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் இருவரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்



வழுக்கம்பாறை சகாயபுரம்

# இடைவிடா சகாய அன்னை திருத்தல திருவிழா

## கொடி ஏற்றத்துடன் நாளை தொடங்குகிறது



சுசீந்திரம்.மே7

சுசீந்திரம் அருகே உள்ள சகாயபுரம் இடைவிட சகாய அன்னை திருத்தல திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலையில் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது இதையொட்டி நாளை காலை 6:30 மணிக்கு திருப்பலியும் மாலை 6 மணிக்கு ஜெபமாலை மற்றும் திருக்கொடியேற்றம் நடைபெறுகிறது

திருக்கொடியேற்ற திருப்பலியில்கோட்டார் மறை மாவட்ட ஆயர் நசரேன் சூசை தலைமை தாங்கி மறையுரை வழங்குகிறார் திருவிழா வருகிற 17ஆம் தேதி வரை 10 நாட்கள் வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது விழா நாட்களில் தினமும் ஜெபமாலை நவநாள் திருப்பலி நற்கருணை ஆசீர் அன்பியம் பக்தசபை இயக்கங்களின் ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது விழாவின் ஒன்பதாம் திருவிழாவான 16ஆம் தேதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலியும் மாலை 6:00 மணிக்கு கோட்டார் மறை மாவட்ட செயலாளர் மரிய கிளாட்சன் தலைமையில் சிறப்பு மாலை ஆராதனையும் நடக்கிறது இதில் மறை மாவட்ட அன்பிய பணிக்குழு செயலாளர் சகாய கிளாசின் மறையுறை வழங்குகிறார் இரவு 8 மணிக்கு தேர் பவனி நடைபெறுகிறதுதிருவிழாவின் நிறைவு நாளான 17 ஆம் தேதி ஞாயிறு 6:30 மணிக்கு திருப்பலியும் காலை 8.00 மணிக்கு மறை மாவட்ட முதன்மை அருட்பணியாளர் ஜாண் ரூபஸ் தலைமையில் திருவிழா சிறப்பு திருப்பலி நடைபெறுகிறது இதில் பணி குழுக்களின் ஒருங்கிணைப்பு செயலாளர் எட்மண்ட் மறையுறையாற்றுகின்றார் மாலை 5.00 மணிக்கு திருப்பலியுடன் கொடி இறக்க திருப்பலி நடக்கிறது திருப்பலிக்கு நம் வாழ்வு துணை ஆசிரியர் ஞானசேகரன் தலைமை தாங்குகிறார். திருப்பலியில் இனையம் இணை பங்கு தந்தை ஜெனிஷ் கவின் மறையுரை வழங்குகிறார் தேவ சகாயம் மவுண்ட் இணைபங்கு தந்தை ஞானராய் இணைந்து ஜெபிக்கிறார் இரவு 8 மணிக்கு பங்கு இறைமக்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது விழாவிற்கான ஏற்பாடுகளை ஆலய பங்குத்தந்தை ஜோசப் ரொமால்ட் இணை பங்குத்தந்தை அஜின்ராஜ் பங்கு பேரவை துணைத்தலைவர் சகாய ராஜன் செயலாளர் சகாயராஜ் துணைச் செயலாளர் சபிலா ரோஸ்லின் ஷீபா பொருளாளர் சர்மிளா பானு மற்றும் பங்கு பேரவையினர் பங்கு மக்கள் இணைந்து செய்து வருகின்றனர்.

ஈரோடு ராஜாஜி புரம்

# சக்தி மாகாளி அம்மன் மதுரை வீரன் கோவில் திருவிழா: அலகு குத்தி பக்தர்கள் நேர்த்திக்கடன்



ஈரோடு மே 7

ஈரோடு ராஜாஜிபுரத்தில் சக்தி மாகாளி அம்மன்மதுரைவீரன்கோவில் உள்ளது .இந்த கோவிலின் திருவிழா கடந்த 28ம் தேதி பூச்சாட்டு நிகழ்ச்சியுடன் தொடங்கியது. நேற்று காலை அம்மனை காவிரி ஆற்றங்கரையிலிருந்து புஷ்பரதத்தில் அலங்கரித்து கோவிலுக்கு அழைத்து வரப்பட்டது. அப்போது பக்தர்கள் பூச்சட்டி, இளநீர் காவடி மற்றும் ஏராளமான பக்தர்கள் அலகு குத்தி வந்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினார்கள். தொடர்ந்து பக்தர்கள் பொங்கல் வைத்து அம்மனுக்கு படைத்து வழிபட்டனர். மாலையில் அம்மனை அழைத்து வந்து பூஜை நடத்தி பலிபீடம் ஆராதனை செய்யும் நிகழ்ச்சி நடந்தது .இன்று மாலை கருப்பராயன் கோவிலில் இருந்து மதுர வீரன் சிலையை புஷ்புரதத்தில் அலங்கரித்து ஊர்வலமாக கொண்டுவரும்.8 ந் தேதி பக்தர்கள் சாமி வேடமிட்டு கேளிக்கைகள் நடத்தும் நிகழ்ச்சியும் அம்மனை புஷ்பரதத்தில் அழைத்து வரும் நிகழ்ச்சியும் பூஜைகளும் நடக்கிறது .9 ந் தேதி மாலை சக்தி கரகத்தை கோவிலிலிருந்து எடுத்துச் சென்று காவிரியாற்றில் விடுதல் இதையடுத்து காலை 9 மணி பக்தர்கள் மஞ்சள் நீராட்டுதல் போன்ற நிகழ்ச்சி நடக்கிறது. 10 ந் தேதி தேதி காலை மறு பூஜையுடன் விழா முடிகிறது .அன்று அன்னதானம் வழங்கப்படுகிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை திருவிழா குழுவினர் செய்துள்ளனர்.



கோவையில்

# தவெக அதிரடி 10ல் 6 தொகுதிகள் கைப்பற்றி சாதனை

கோவை, மே 7

தமிழகசட்டப்பேரவைத் தேர்தலில் கோவை மாவட்டத்தின் 10 சட்டமன்றத் தொகுதிகளில் 6 இடங்களை கைப்பற்றி தமிழக வெற்றிக் கழகம் குறிப்பிடத்தக்க வெற்றியை பதிவு செய்துள்ளது.

இதுவரை அதிமுகவின் வலுவான கோட்டையாகக் கருதப்பட்ட கோவை மண்டலத்தில்,இந்த முறை தவெக முன்னிலை பெற்று தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

கடந்த தேர்தலில் கோவை மாவட்டத்தின் அனைத்து 10 தொகுதிகளையும் அதிமுக கூட்டணி கைப்பற்றியிருந்தது.இந்த முறை அந்த நிலையைத் தக்க வைக்க அதிமுகவும், இழந்த செல் வாக்கை மீட்டெடுக்க திமுகவும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன.

ஆனால்,மாற்று அரசியல்,ஊழல் எதிர்ப்பு மற்றும் வளர்ச்சி வாக்குறுதிகளை முன்னிறுத்திய தவெக பிரச்சாரம் மக்களிடம் வர வேற்பைப் பெற்றதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். தேர்தல் முடிவுகளின்படி,சிங்காநல்லூர்,சூலூர்,மேட்டுப்பாளையம்,கவுண்டம்பாளையம்.கிணத்துக்கடவு மற்றும் கோவை வடக்கு ஆகிய 6 தொகுதிகளில் தமிழகவெற்றிக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

திமுக சார்பில் பொள்ளாச்சி,வால்பாறை மற்றும் கோவை தெற்கு ஆகிய 3 தொகுதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.அதிமுகவுக்கு பெரும் பின்னடைவாக,அக்கட்சி தொண்டாமுத்தூர் தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

கோவை மண்டலத்தில் பல இடங்களில் அதிமுக மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் முழுவதும் 108 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள தவெக, கோவையிலும் தனது அரசியல் பலத்தை உறுதிப் படுத்தியுள்ளது. மக்கள் அளித்துள்ள இந்த ஆதரவை தொடர்ந்து.தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி மாவட்ட வளர்ச்சிக்காக புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கன்னியாகுமரி அருகே

# கொத்தனாருக்கு கட்டையால் தாக்கி கொலை மிரட்டல்

கன்னியாகுமரி, மே. 7

கன்னியாகுமரி அருகே லட்சுமிபுரத்தை சேர்ந்தவர் தினேஷ் (33) கொத்தனார் வேலை செய்து வருகிறார். இவருக்கும் மலையடி பகுதியை சேர்ந்த சந்துரு (27) என்பவருக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. சம்பவ தினம் தினேஷ் லட்சுமிபுரத்தில் உள்ள அவரது வீட்டின் முன்னால் நின்று கொண்டிருந்தபோது, திடீரென அங்கு வந்த சந்துரு கையில் வைத்திருந்த கட்டையால் தினேஷை சரமாரியாக தாக்கியுள்ளார். மேலும் கொலை மிரட்டல் விடுத்து விட்டு சென்றுள்ளார்.

இதில்படுகாயம்அடைந்ததினேஷைஅக்கம்பக்கத்தினர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு சிகிச்சையில் இருந்து வருகிறார். இது குறித்த புகாரின் பேரில் கன்னியாகுமரி போலீசார் சந்துரு மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மேலும் சந்துரு மீது கன்னியாகுமரி, அஞ்சுகிராமம் காவல் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

நாகர்கோவில் அருகே

# திருமணத்துக்கு பெண் தர மறுத்த பெற்றோர் மீது தாக்குதல்; ஜிம் பயிற்சியாளர் மீது வழக்கு

நாகர்கோவில், மே. 7

நாகர்கோவில் டென்னிசன் ரோடு பகுதியை சேர்ந்தவர் பெஞ்சமின்மகன்ஆஷிஸ் பெஞ்சமின் (38) ஜிம் பயிற்சியாளர். இவர்அதே பகுதியை சேர்ந்த எம் ஏ முதலாமாண்டு படித்து வரும் மாணவி ஒருவரை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. அவரை பலமுறை பெண்ணின் வீட்டிற்கு சென்று திருமணம் செய்ய கேட்டுள்ளார். ஆனால் பெண் வீட்டு தரப்பினர் இதற்கு சம்மதிக்கவில்லை.

இந்த நிலையில் சம்பவ தினம் அந்த பொன்னின் வீட்டிற்கு சென்ற ஆஷிஸ் பெஞ்சமின் வீட்டிலிருந்த மாணவியின் பெற்றோரிடம் பெண் தர கேட்டு தகராறு செய்துள்ளார். அப்போது பெண்ணின் பெற்றோரை அவர் தரக்குறைவாக பேசி தாக்கியதுடன், வீட்டு கதவு, ஜன்னல் ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்தியதாக கூறப்படுகிறது. இது குறித்து அந்த பெண்ணின் தாயார் வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் விசாரணை நடத்தி ஆஷிஸ் பெஞ்சமின் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்ததாக்குதலில் காயம் அடைந்த பொன்னின் தந்தை குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குளச்சல் அருகே

# வேகத்தடையில் பைக் தடுமாறி விழுந்ததில் விஜய் ரசிகர் உயிரிழப்பு



குளச்சல், மே. 7

கருங்கல் அருகே மிடாலம் மீனவர் கிராமத்தை சேர்ந்தவர் சகாய தினேஷ் (29). கடலில் மீன் பிடி தொழில் செய்து வந்தார். நேற்று முன்தினம் இரவு மருந்து வாங்குவதற்காக பைக்கில் மிடாலம் குறும்பனை சாலையில் குளச்சல் நோக்கி சென்று கொண்டிருந்தார். சைமன் காலனி பாலம் அருகில் உள்ள வேகத்தடையில் செல்லும்போது எதிர்பாராத விதத்தில் அவரது பைக் நிலை தடுமாறி கீழே விழுந்தது. இதில் அவருக்கு தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. உடனே அப்பகுதியினர் அவரை மீட்டு குளச்சலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். முதலுதவி சிகிச்சைக்கு பின் நாகர்கோவில் மற்றொரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று சகாய தினேஷ் உயிரிழந்தார்.

இது குறித்து அவரது மனைவி அனிதா செலிதா என்பவர் குளச்சல் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து அவரது உடலை குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடற்கூராய்வுக்கு ஆய்வு அனுப்பி வைத்தனர். பலியான சகாய தினேஷ் தவெக விஜய் ரசிகராகவும், கடந்த சட்டமன்ற தேர்தலில் தீவிர தேர்தல் பணி செய்தும் வந்தார். இவருக்கு 4 வயதில் ஒரு மகள் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.